முருகப்பெருமான் துணை

# மகான் காரைக்கால் அம்மையார் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.10.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. பேருலகம் காக்க வந்தநல்
பிரணவ சக்திமிகு அரங்கனே
தருமவழி காட்டும் அருளும்
தவராஜனே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசியதும் சோபகிருது தரிவை திங்கள்
அய்நான்கோர் திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 21 ம் நாள், 08.10.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் காரைக்கால் அம்மையார்
வழங்குவேன் உலகநலம்பெற
சோரமின்றி ஞானவான்கள் படை
செகமெல்லாம் உருவாக்க வேண்டி
4. வேண்டி அவதாரம் எடுத்த
வேலவனின் மகாசக்தியே
உண்டான உன் ஞானபீடம்
உயர்சபை பிரணவக் குடிலுக்கு
5. குடிலுக்கு உலக மக்களெல்லம்
குறைவின்றி வருதல் காண
தேடியும் கிட்டா பேரின்பம்
தேசிகன் தரிசணத்தால் கிட்டுமப்பா
6. அப்பனே அரங்கா முருகாயென
அனுதினமும் செபதபமாகவே
ஒப்புக் கொண்டு செய்துவந்திட
ஓங்கார ஞானம் கைகூடும்

7. கூடவே தன்நிலை அறிந்து
குருவருள் பலம் மகத்துவம் தனை
திடமுற உணர்ந்து தேறியே
தெரிவிப்பேன் ஞானவான்களாக
8. ஆகவே ஆற்றல் பெருகி
அரங்கன் தேடல் வழி
செகமதில் தேர்வு காண்பர்
சித்திகண்ட ஞானிகளாகவே
9. ஆகவே பிறவி நோக்கமும்
அரங்கன் அவதார நோக்கமும்
வகையாக இணைக்கப் பட்டிருக்க
வருவோர் முழு சரணாகதி கொண்டால்
10. கொண்டால் போதுமப்பா
கொடுக்கல் வாங்கலாக
உண்டாகும் குருசீடர் வகை
உயர்வான சூட்சும பரியந்தம்
11. பரியந்தம் பரிபூரணமாகி
பரிபக்குவ பரமானந்தகதி
அறியக்கிட்டும் அரங்கன் தயவால்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—